# தென்மண்டல வேளாண்மைக் கருத்துக்காட்சி மற்றும் உழவர் தின விழா - 2015

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்திய மற்றும் தமிழக அரசுடன் இணைந்து தென்மண்டல வேளாண்மைக் கருத்துக் காட்சி மற்றும் உழவர் தின விழா 2015, வரும் ஜனவரி 6-9, 2015 அன்று பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் நடத்த உள்ளது.

இந்த கருத்துக்காட்சி மற்றும் உழவர் தினவிழா 2015-ன் துவக்க விழா, ஜனவரி 6ந் தேதி அன்று பல்கலை பட்டமளிப்பு விழா அரங்கில் நடைபெற உள்ளது.

இதன் ஒரு பகுதியாக, வெவ்வேறு விதமான வேளாண் பிரச்சினைகள் மற்றும் முக்கியமான தலைப்புகளில் 4 கருத்தரங்குகள் நான்கு நாட்கள் நடைபெற உள்ளது. புதிய பயிர் இரகங்கள் மற்றும் கண்டுபிடிப்புகள், 9ஆம் தேதியன்று வெளியிடப்படுகிறது.

மேலும், இக்கருத்துக்காட்சியின் ஒரு பகுதியாக, கண்காட்சி அமைக்கப்பட உள்ளது. இதில் 40 உள் அங்காடிகளும் 20 வெளி அங்காடிகளும் அமைக்கப் பெறுகின்றன.

வேளாண் பல்கலைக்கழகத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட விவசாய, தோட்டக்கலை மற்றும் வேளாண் சார்ந்த பயிர் இரகங்கள், வேளாண் கருவிகள், நவீன இயந்திரங்கள் மற்றும் இதர தொழில்நுட்பங்கள் ஆகியவை கண்காட்சியில் உழவர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட உள்ளன.

பங்கேற்பாளர்கள் வேளாண் தொழில் முனைவோர்கள், முன்னோடி விவசாயிகளின் கண்டுபிடிப்புகள், தனியார் நிறுவனத்தின் தயாரிப்புகள், மற்றும் நவீன கண்டுபிடிப்புகள் அணிவகுப்பில் இடம்பெறும்.

வேளாண், தோட்டக்கலை மற்றும் வேளாண் சார்ந்த அரசுத் துறைகளின் பல்வேறு விதமான திட்டங்கள், அதன் பயன்கள், மற்றும் பயனாளிகள் ஆகியன இடம்பெறுகின்றது. மேலும், பண்ணை இயந்திர உருவாக்கும் நிறுவனம், சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் தயாரிப்புகள் மற்றும் விவசாயிகளின் நவீனத் தொழில்நுட்பம் சார்ந்த பண்டங்கள் விற்பனைக்காக வைக்கப்படுகின்றது.

இந்த கருத்துக்காட்சி மற்றும் உழவர் தினவிழாவின் முத்தாய்ப்பாக, விவசாயிகளின் சாதனைகளுக்கு அங்கீகாரம் அளிக்க **வேளாண் செம்மல் விருதினை**, சி.ஆர்.ஐ. பம்புகளின் அறக்கொடையும், **மாங்கனி செம்மல் விருதினை** கோவை பழமுதிர் நிலையமும், **வாழை செம்மல் விருதினை** தேனீ APK வாழை உலகமும் வழங்க உள்ளனர். இவ்விருதுகள் ரூ. 10,000 ரொக்கப் பணமும், நினைவுப் பரிசும், சான்றிதழும் கொண்டது. இந்த வேளாண் செம்மல் விருது, வேளாண் தொழில்நுட்பத்தின தாக்கத்தினால், உற்பத்தி, மதிப்புக் கூட்டுதல் மற்றும் வேளாண் பொருள் விற்பனையில் வெற்றி கண்ட விவசாயிகளைத் தேர்வு செய்து வழங்கப்படுகின்றது. மேலும், இவ்விருதுக்கான பிற தகுதிகளாக, எந்த அளவு தொழில்நுட்பத்தை சாதன விவசாயிகள், சக விவசாயிகளுக்கு கொண்டு செல்கின்றனர் மற்றும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளை பறை சாற்றுகின்றனர் என்பனவும் ஆகும்.

இம்மாபெரும் கருத்துக்காட்சிக்கு தென் இந்தியாவில் உள்ள வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிறுவனங்கள் சார்பில் விவசாயிகள் கலந்து கொள்ள உள்ளார்கள். ஏறத்தாழ, 10,000க்கும் அதிகமான விவசாயிகள் இக்கருத்துக்காட்சி மற்றும் உழவர் தினவிழாவில் கலந்து கொள்கின்றார்கள்.

இக்கருத்துக்காட்சி, பார்வையாளர்களுக்கு அதிநவீன தொழில்நுட்பங்கள், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் நவீன விவசாயம் பற்றி அறிந்துகொள்ள ஒரு மிகப்பெரிய தளமாக அமையும் என்று நம்பப்படுகின்றது.